# 3500 மாவீரர்கள் நினைவாக இன்று நள்ளிரவு மணியோசை எழுப்பி சுடர்ஒளி ஏற்றப்படும்

இந்த மண்ணுக்காகவும், மக்களுக்காகவும் தம்மை தியாக வேள்வியில் ஆகுதி ஆக்கிக் கொண்ட 3500க்கு மேற்பட்ட மாவீரர்களின் நினைவாக, தமிழீழ மண்ணும், மக்களும் அவர்களுக்கு நன்றி செலுத்தும் பெருவிழாவும், தமிழீழத்தின் தேசிய நாளும் இன்று நள்ளிரவு 12மணிமுதல் ஆரம்பமாகிறது. இந்த உணர்வு மிக்க நாளை நினைவூட்டும் வகையில் இன்று நள்ளிரவு 12 மணிக்கு தமிழீழ மண்ணிலுள்ள சகலபாடசாலைகள், உயர்கல்லூரிகள், தேவாலயங்கள், கோயில்கள், பொதுஸ்தாபனங்கள் உட்பட எங்கெங்கு மணிகள் இருக்கின்றனவோ அவையெல்லாம் விடுதலை நெருப்பைமூட்டும்வண்ணம் மணிகள் ஒலிக்கத் தொடங்கும். இவ்வாறு மாவீரர் நாள் பணிமனை விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மணிகள் ஒலிக்கத் தொடங்கி, 12.02 முடியும்வரை அனைத்து மக்களும் போராளிகளும் எழுந்து நின்று 2நிமிட மௌன அஞ்சலி செலுத்துவார்கள். மௌன அஞ்சலி செய்யும் வேளை கீழ்வரும் வார்த்தைகளை உச்சரித்தபடி செய்வது நல்லது.

''எங்களுக்காக மடிந்த உடன் பிறப்புகளே! உங்களை நாங்கள் மறக்கவில்லை... உங்கள் நினைவு என்றும் எம் நெஞ்சில் நிழலாடும்.'' மாவீரர் நினைவாக மணியொலி ஒலிப்பதற்கு முன்பாகவே நித்திரையை விட்டு எழுந்து முன்கூட்டியே மணியோசை கேட்கும் போது மௌன அஞ்சலி செய்தல் நல்லது. மணியோசை ஒலிக்கும் போது தமிழீழ மக்கள் ஒவ்வொருவரும் தாம் செய்து கொண்டிருக்கும் வேலைகளை அப்படி அப்படியே விட்டு விட்டு, அந்த இடங்களிலேயே நின்று மௌன அஞ்சலி செய்வார்கள் அந்தஇரண்டு நிமிடங்களும் இம்மண்ணில் மாவீரர் மணியோசையைத் தவிர வேறு ஒலிகள் எதுவுமே கேட்காது. அதுபோல் அந்தஇரண்டு நிமிடங்களும், ஒரு அசைவுமே இம்மண்ணில் நிகழாது

— 04ஆம் பக்கம் பார்க்க

பக்கங்கள் நான்கு விலை ரூபா: 5 - 00

# முரசொலி

முரசு 05 ஒலி 317 அசோகபத்தி கார்த்திகை 10 (26 - 11 - 1991) செவ்வாய்

## ஜனாதிபதி கூறிய யானை கதை!

''என்னிடம் 125 யானைகள் இருந்தன. அவை அனைத்தும் சிறந்தவை என்றே நான் எண்ணினேன். ஆனால் அவற்றில் 8யானைகளுக்கு மதம்பிடித்து என்னையே கொல்ல வந்தன.'' இப்படிகூறினார் ஜனாதிபதி பிரேமதாஸ நேற்று முன்தினம் அவர் அம்பாறை சென்றிருந்தபோது அங்கு காணப்படும் யானைத்தொல்லையை நீக்க வழிசெய்யுமாறு விவசாயிகள் மகஜர் ஒன்றை கையளித்த வேளையில் ஜனாதிபதி இந்த யானைக்கதையைக் கூறினார். அவர் அங்கு தொடர்ந்து பேசிய போது, ''அந்த மதங்கொண்டயானைகளைநான் கொல்லவிரும்பவில்லை அவற்றை காட்டிற்குள் விரட்டுமாறு வனத்துறையினரை பணித்துள்ளேன் என்றார் எண்மர் கொண்ட ஐ. தே. க. அதிருப்தியாளர் குழுவையே அவர் இவ்வாறு குறிப்பிட்டதாக சுட்டிக்காட்டப்படுகிறது.

# உறுதிமிக்க தலைவர் தலைமையில் திரண்டுள்ளனர் தமிழர்; வெற்றி நிச்சயமே!

''உறுதிமிக்க, தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் தலைமையில் இன்று நாம் அணிதிரண்டுள்ளோம். வெற்றி நிச்சயமே'' என்று நேற்று வருத்தித்துறை சந்தை மைதானத்தில் நடைபெற்ற மாவீரர் எழுச்சி வாரக்கூட்டத்தில் பேசுகையில் விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணிக் கொள்கை முன்னெடுப்புப் பொறுப்பாளர் திரு. பரா பேசுகையில் கூறினார்.

பல்லாயிரக்கணக்கான மக்கள் இன விடிவுக்காய் தம் இன்னுயிரை ஈந்திட்ட மாவீரர் நினைவாக இக் கூட்டத்தில் திரண்டிருந்தனர்.

திரு. பரா மேலும் பேசுகையில் ''ஸ்ரீலங்கா அரசின் திட்டமிட்ட பொருளாதார மற்றும் நெருக்கடி நிலைகளால் நம் மக்கள் பெருந்துன்பமுறுகின்றனர்.

இந்தியாவிலும் கூட எம் இனவிடுதலை உணரப்பட்டுள்ளது விடுதலை நிலைக்குச் சாதகமான நிலை உருவாகியுள்ளது எழுச்சிகொள் தமிழர் அங்கு பெருமளவில்

—04 ஆம் பக்கம் பார்க்க

## பேச்சிற்கு நிபந்தனை வேண்டும் என்கிறார் அத்துலத் முதலி

விடுதலைப் புலிகளுடன் அரசு பேச்சு வார்த்தை நடாத்துவதனால் அரசதரப்பில் பேச்சிற்கான முன் நிபந்தனைகள் விதிக்கப்பட வேண்டும் என அதிருப்திக் குழுவைச் சேர்ந்த லலித் அத்துலத் முதலி தெரிவித்துள்ளார்.

தமிழர் தரப்பில் பல குழுவினர் இருப்பினும்விடுதலைப் புலிகளே பிரதானமானவர்கள் என்பதை லலித் அத்துலத் முதலி ஏற்றுக் கொண்டதாகவும் கொழும்புப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

## நாயகன் வாழ்கவே!


## 6 அநுராதபுர வர்த்தகர்கள் விடுவிக்கப்படுவர்

விடுதலைப் புலிகளுக்கு தடைசெய்யப்பட்ட பொருள்களை வழங்கினார்கள் என்ற குற்றச் சாட்டின் பேரில் கை... படவுள்ளனர்.

இவ் வர்த்தகர்களுக்கு எதிராக உறுதியான குற்றச் சாட்டுகள் ஏதுமில்லாமையினால்

## வவுனியா தடை முகாமில்

## நாயகன் வாழ்கவே!



கால காலமாய் மிதித்து நசுக்கவும்
கண்ட கண்ட இடங்களில் கொல்லவும்
ஏலும் இந்த ஈழத்தமிழரை.
என்றிருந்த இழிநிலை போக்கியோன்;
சோழமன்னர் பிடித்த புலிக்கொடி
தூக்கிச் சிங்களச் சேனை சிதறிப்போய்
வீழ மோதும் தம் வேங்கைகளின் நாயகன்
வேலுப்பிள்ளை பிரபாகரன் வாழ்கவே!

## வவுனியா தடை முகாமில் வாகன லைசன்ஸ் சோதனை

வவுனியா தடைமுகாமில் இனி நடப்பு வருடத்திற்குரிய வாகன உத்தரவுப்பத்திரமும் படையினரால் பரிசோதிக்கப்படும் என கூட்டுப்படை தலைமையகம் அறிவித்துள்ளது.

வவுனியா ஊடாக செல்லும் வாகனங்களின் சாரதிகள் வாகன உத்தரவுப்பத்திரத்தை தம்மோடு எடுத்துவர தவறின் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## முன்னெச்சரிக்கையாகவே ஊரடங்குச் சட்டமாம்!

வடபகுதியில் ஊரடங்குச் சட்டம் அமுல் செய்யப்பட்டமை முன்னெச்சரிக்கை நடவடிக்கையாகவே என இராணுவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன

மாவீரர் தினத்தையொட்டி ஆயுதப்படையினர் மீது புலிகள் தாக்குதல்களை நடாத்தலாம் என்பதினாலேயே முன்னெச்சரிக்கையாக உள்ளோம் என அவ்வட்டாரங்கள் தெரிவித்துள்ளன,

## மூவாயிரத்துக்கு மேற்பட்ட பெற்றோருக்கு கௌரவம்

தமிழீழ தேசத்திற்காய் தங்கள் புதல்வர்களைத் தந்து போர்க்களத்தில் மாவீரராக்கியபெற்றோர்களை தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினர் உரிய கௌரவம் வழங்கி கௌரவிக்கும் நிகழ்ச்சிகள் யாழ் குடாவில் பல இடங்களில் நேற்றிலிருந்து நடைபெற்று வருகின்றன.

மூவாயிரத்து ஐந்நூறுக்கு

— 04 ஆம் பக்கம் பார்க்க

களை வழங்கினார்கள் என்ற குற்றச் சாட்டின் பேரில் கைதான 6 அநுராதபுர வர்த்தகர்கள் விடுதலை செய்யப்

ராக உறுதியான குற்றச சாட்டுகள் ஏதுமில்லாமையினால் இவர்கள் விடுதலை செய்யப்

—04 ஆம் பக்கம் பார்க்க

## ஸ்ரீலங்கா மாணவர் பிரச்சினையில் பொலிஸார் தலையிடும் நிலை

கொழும்பில் பல்கலைக்கழக மாணவர்களால் நடாத்தப்பட்ட ஆர்ப்பாட்டங்களைக் கட்டுப்படுத்திச் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலை நாட்டுவதற்கும் பல்கலைக் கழகத்திற்குள் பொலிசார் செல்ல அனுமதிக்கப்பட்டனர் என்று தெரிவிக்கப்படுகின்றனர்.

சுமார் 4000 மாணவர்கள் கலந்து கொண்ட இந்த ஆர்ப்

— 04 ஆம் பக்கம் பார்க்க

பாசறை நான் புகுந்த இடம்!
பதுங்குகுழி உறங்கும் இடம்!
தேசநலன் எனது கடன்!
தேன்தமிழே எனது திடன்!
என்னினமே என்சனமே
என்னை உனக்குத் தெரிகிறதா?

### மாவீரர் வாரம்

இன்று எழுச்சியும் உணர்ச்சியும்
பொங்கிப் பிரவாகிக்கும்
ஆறாவது நாள்.

மாவீரர் வாரம்

போர்க்காலச் சித்தனை: 6

## இகழ்க புலவீர்!

''எல்லைகள் மீறிச் சுவடுகள் பதிக்க
மெல்லவே வந்து கவசம் ஊர்வோர்
தொல்லைகள் தொலைத்துத் துவம்சம் ஆக்கல்
இல்லையேல்; என்னை இகழ்க புலவீர்!
வீரம் அற்றவன் இவனென இகழ்மின்
பாரம் இவனும் புதரெனப் பழிமின்''

'எமது மண்ணின் எல்லைகளைமீறித்தம்சுவடுகளைப் பதிப்பதற்காகக் கவச வாகனங்களில் ஊர்ந்து வரும் எதிரிகளின் தொல்லைகளை நீக்கி, அவற்றைச் சுக்கு நூறாக்கவில்லையெனில், என்னைப் புலவர்கள் இகழ்ந்து பாடுவாராகுக இவன் வீரமற்றவன். பூமிக்குப் பாரமானவன் என்று அவர்கள் என்னை பழிக்கட்டும்' என்று ஓர் தமிழ் மறவன் சபதம் எடுத்துக் கொண்டான். இங்கு வீரனின் தீர உணர்வு புலவர் புகழ்ந்து பாடும் தகைமையுடையதாகும்.

இந்த உணர்வு அன்றும் இருந்தது.

''என்னொடு பொருது மென்பவரை
ஆரம ரலறத் தாக்கித் தேரொ
டவர்ப்புறங் காணே னாயிற் சிறந்த
பேரம ருண்க ணிவனினும் பிரிக''

(புறம் 71 - 3 - 6)

'என்னோடு வந்து போரிடப் போகிறோம் என்பவர்களைப் பொறுத்தற்கரிய போரில் எதிரிகள் அலறி ஓடும்படியாக அவர்களை உக்கிரமாகத்தாக்கி தேருடனே அவர்கள் உடைந்தோடும் புறமுதுகைக்காணேனாயின் சிறந்த என் தேவியை விட்டு நான் நீங்குவேனாகுக! என்பது புறநானூற்றுப்பாடல்.

வஞ்சினம் கூறுதல் அக்காலத்து மக்களின் மறப் பண்பாகும் எந்த வீரச்செயலிலும், இன்னது செய்யாவிடில் இவ்வாறு ஆவோமென்று கூறி அவ்வாறே செய்து முடிப்பது அவர்களின் சிறந்த இயல்புகளின் ஒன்றாக இருந்தது. எண்ணியர் திண்ணியராக இருப்பின் இது நடந்தே தீரும் என்பது உறுதி

— முருகனடியான்

# நாடுதிரும்பும் ஈழ அகதிகளுக்கு
# இறங்கு துறைகளில் எயிட்ஸ் பரிசோதனை!

தமிழகத்திலிருந்து மீண்டும் நாடு திரும்பும் ஈழ அகதிகளுக்கு எயிட்ஸ் பரிசோதனை செய்யப்படுமென சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

இவர்கள் திருமலை அல்லது தலைமன்னார்த் துறைகளில் வைத்து விசேட வைத்தியர் குழுவினால் எயிட்ஸ் பரிசோதனைக்கு உள்ளாக்கப்படுவர்.

இதுவரை காலமும் தமிழகத்திலிருந்து நாடு திரும்பும் அகதிகள் இவ்வாறான வைத்திய பரிசோதனைக்கு உள்ளாக்கப்பட்டிருக்கவில்லை.

இறங்கு துறையில் எயிட்ஸ் பரிசோதனை செய்த அத்தாட்சிப் பத்திரம் சமர்ப்பித்தோருக்கே நாடு திரும்பியதற்கான உதவிகள் வழங்கப்படவுள்ளதாகவும் அறியப்படுகிறது.

## சேவையிலிருந்து நீங்கிய ஆசிரியர் பட்டியல் தயாரிப்பு

1991 ஆம் ஆண்டில் ஒய்வு பெற்று விலகிய ஆசிரியர்களின் தொகையை அவர்களது தராதரங்களின் அடிப்படையில் வகைப்படுத்தித் தமக்கு அனுப்பி வைக்குமாறு வடகிழக்கு மாகாணக் கல்வி அமைச்சு சகல கோட்டக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர்களுக்கும் கடிதங்களை அனுப்பி வைத்துள்ளது.

பயிற்றப்பட்ட ஆசிரியர்கள், பட்டதாரி ஆசிரியர்கள், (தரம் II, தரம் III) என்ற பிரிவுகளில் இளைப்பாறிய, விலகிய ஆசிரியர்கள் பட்டியல் தயாரிக்கப்பட வேண்டுமெனவும் பணிக்கப்பட்டுள்ளது.

## படையினர் வெளியேறினாலேயே வங்காலை மக்கள் திரும்புவர்

வங்காலை மக்கள் தங்கள் சொந்தக் கிராமங்களில் மீண்டும் குடியேற விருப்பம் தெரிவிக்கின்ற போதிலும் அங்கு நிலை கொண்டுள்ள பாதுகாப்புப் படையினர் அங்கிருந்து விலகி சற்றுத் தொலைவிலாவது முகாமிட்டால் தான் தாங்கள் மீளக் குடியேற வசதியேற்படும் என்று தெரிவிக்கின்றனர் என அறியவந்துள்ளது.

இங்கு அரசாங்க அதிபர் மேற்கொண்ட முயற்சிகளின் போதே வங்காலை மக்கள் தம் நிலைப்பாட்டை இவ்வாறு கூறினர்.

## கொழும்பு வைத்தியசாலை அறிவிப்புக்கள் சிங்களத்தில் மட்டுமே

கொழும்பு அரசினர் வைத்தியசாலை சகல பிரிவுகளிலும் உள்ள அறிவித்தல் பலகைகள் தனிச் சிங்களத்திலேயே எழுதப்பட்டிருப்பதால் தமிழ் நோயாளிகள் பெரும் சிரமத்தை எதிர்நோக்குவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வெளி நோயாளர் பகுதி தொடக்கம் நோயாளர்களை அனுமதிக்கும் வார்ட்டுகள் வரையில் உள்ள அறிவித்தல் பலகைகளில் சிங்கள மொழி மாத்திரமே காணப்படுகிறது.

(08)

## இராணுவச் சீருடையில் நடமாடிய ஐவர் கொழும்பில் கைது!

போலி இராணுவச் சீருடைகளை அணிந்த வண்ணம் கொழும்புக் கோட்டைப் பகுதியில் நடமாடிய ஐவர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் வடபகுதியிலிருந்து ரயிலில் கொழும்பு செல்வோரைப் பயமுறுத்தி நகைகளையும், பணத்தையும் அபகரித்து வந்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

## மாவீரர் நினைவுப்போட்டி

பாஷையூர் விளையாட்டுக் கழகம், கடற்புலிகளின் அனுசரணையுடன் நடாத்திய 9 வீரர்கள் மாத்திரம் பங்குபற்றும் உதைபந்தாட்டப் போட்டியில் பாஷையூர் 'தண்டர்' விளையாட்டுக் கழக அணி அதனை எதிர்த்து மோதிய மக்கள்படை விளையாட்டுக் கழக அணியை 5:2 கோல்கள் கணக்கில் தோற்கடித்து சாம்பியன் ஆனது.

அதனைத் தொடர்ந்து நடைபெற்ற கண்காட்சி உதைபந்தாட்டப் போட்டியில் கண்டிக்குளி வர்த்தக சங்க அணியை விளையாட்டுத்துறை நிர்வாகக் குழு அணி 5:1 என்ற கோல்கள் கணக்கில் தோற்கடித்தது. 16

## வளைகுடாவிலிருந்து திரும்பிய பலருக்கு மீண்டும் மேற்குஆசிய நாடுகளில் வேலை

வளைகுடா யுத்தத்தினால் பாதிக்கப்பட்டு நாடுதிரும்பிய இலங்கையர்களில் பலர் மீண்டும் வேலை பெற்று மேற்கு ஆசிய நாடுகளுக்குச் சென்று விட்டனர்.

இலங்கை வேலைவாய்ப்புப் பணியகம் நடாத்திய பரிசீலனை ஒன்றிலிருந்து இத் தகவல் தெரியவந்துள்ளது.

இதனால் இவர்கள் யுத்தத்தினால் பாதிக்கப்பட்டு நாடு திரும்பியமைக்கான நஷ்டஈட்டைப் பெறத்தகுதியற்றவர்கள் எனக்கருதமுடியாது எனவும் அவர்களின் நெருங்கிய உறவினர்களிடம் நஷ்டஈடு கையளிக்கப்படுமெனவும் தெரிவிக்கப்படுகிறது.

## கனிமரங்கள் விநியோகம்

மாவீரர் வாரத்தையொட்டி கோப்பாய் மக்கள் நலன் காக்கும் பிரிவினர் கோப்பாய் கிராமசபைப் பிரதேசத்திலுள்ள மாவீரர் குடும்பங்களுக்கு இலவசமாகப் பயன் தரும் கனிமரங்களை விநியோகித்துள்ளனர். (06)

## சொத்துக்களே வேண்டாம் என்கிறார் கோடீஸ்வரன்

ஏராளமான வர்த்தக நிறுவனங்களுக்கு உரிமையாளரும் பெரும் கோடீஸ்வரருமான டொம் மொனாகன் தனது வர்த்தகத்தையும் உடைமைகளையும் விற்று சுவர்க்கத்துக்குச் செல்ல வழி அமைக்கப் போவதாகக் கூறியிருக்கிறார்.

54 வயதான இவர் கலைப் பொருள்கள், அரிய மோட்டார்கள் இதர சொத்துக்கள் மூலம் ஏராளமான செல்வத்தைத் திரட்டி பெரும் வர்த்தக சாம்ராஜ்யத்தை அமைத்தார்.

ஆனால் பணக்காரன் சுவர்க்கம் செல்வது பற்றிய பைபிளின் வாசகத்தை நான் எப்போதும் அறிந்திருக்கிறேன். நான் திரட்டிய செல்வம் எனக்கு மகிழ்ச்சியை அளிக்கவில்லை எனத் தெரிவிக்கி

## மாவீரர் கௌரவம்

பருத்தித்துறை சி. எம். ஈ கல்வி நிலையத்தில் கல்வி கற்ற பதினாறு மாவீரர்கள் மாவீரர் வார ஆரம்பதினத்தன்று கௌரவிக்கப்பட்டனர்

## மத வழிபாடுகளை நடாத்த தாய்லாந்திலிருந்து 100 பிக்குகள்

இலங்கையில் மதவழிபாடுகளை நடாத்தவென தாய்லாந்திலிருந்து நூறு பௌத்த குருமார் இலங்கை வரவுள்ளனர்.

இவர்கள் அனுராதபுரம் ருவன் வலிசாய தாதுகோபத்தில் விசேட சடங்கு ஒன்றை நடாத்தவுள்ளனர். இச் சடங்கில் ஜனாதிபதியும் கலந்து கொள்ளவுள்ளார்.

இவர்களுடன் தாய்லாந்தின் விமானப்படைத் தளபதியும் இலங்கை வந்துள்

## பிரிட்டிஷ் கவுன்சில் நூலகத்தை மூடிவிடத் தூதரகம் முடிவு

கண்டியில் நீண்ட காலமாக இயங்கி வரும் பிரிட்டிஷ் கவுன்சில் வாசிகசாலையை மூடிவிட இலங்கையில் உள்ள பிரிட்டிஷ் தூதரகம் தீர்மானித்துள்ளதாக அறியப்படுகின்றது.

இந்த நூல்நிலையம் நவீன புத்தகங்களைக் கொண்டுள்

இதுகுறித்து மத்திய மாகாண சபையில் உரையாற்றிய உறுப்பினர் டி. எம். திஸாநாயக்க இந்நூலகம் மூடப்படுவதற்கு பிரிட்டிஷ் தூதுவர் டேவிட் கிளாட்ஸ்டோன் கொழும்பிலிருந்து திருப்பி அனுப்பப்பட்டதுதான் காரணம் என தான் அறிவதாகத் தெரிவித்தார்

கும் பிரிவினர் கோப்பாய் கிராமசபைப் பிரதேசத்திலுள்ள மாவீரர் குடும்பங்களுக்கு இலவசமாகப் பயன் தரும் கனி மரங்களை விநியோகித்துள்ளனர். (06)

உடைமைகளையும் விற்று சுவர்க்கத்துக்குச் செல்ல வழி அமைக்கப் போவதாகக் கூறியிருக்கிறார்.

54 வயதான இவர் கலைப் பொருள்கள். அரிய மோட்

தார்.

ஆனால் பணக்காரன் சுவர்க்கம் செல்வது பற்றிய பைபிளின் வாசகத்தை நான் எப்போதும் அறிந்திருக்கிறேன். நான் திரட்டிய செல்வம் எனக்கு மகிழ்ச்சியை அளிக்கவில்லை எனத் தெரிவிக்கிறார் டொம் மொனாகன்.

கண்டியில் நீண்ட காலமாக இயங்கி வரும் பிரிட்டிஷ் கவுன்சில் வாசிகசாலையை மூடிவிட இலங்கையில் உள்ள பிரிட்டிஷ் தூதரகம் தீர்மானித்துள்ளதாக அறியப்படுகின்றது

இந்த நூல்நிலையம் நவீன புத்தகங்களைக் கொண்டுள்ளது.

இதுகுறித்து மத்திய மாகாண சபையில் உரையாற்றிய உறுப்பினர் டி. எம். திஸாநாயக்க இவ்நூலகம் மூடப்படுவதற்கு பிரிட்டிஷ் தூதுவர் டேவிட் கிளாட்ஸ்ரோன் கொழும்பிலிருந்து திரும்பி அனுப்பப்பட்டது தான் காரணம் என தான் அறிவதாகத் தெரிவித்தார்

## வளைகுடா பாதிப்பு நஷ்டஈடு மே மாதத்திலேயே கிடைக்கும்

வளைகுடா யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட இலங்கைத் தொழிலாளர்கள் ஐக்கிய நாடுகள் வழங்கும் நஷ்டஈட்டை இவ்வருடம் பெறமாட்டார்கள் அடுத்த வருடம் மே மாதத்திலேயே இந்த நஷ்டஈடு கிடைக்கும்.

ஐ.நா சபை நஷ்டஈட்டு நிதியம் இன்னமும் ஈராக்கிடமிருந்து பணத்தைச் சேர்த்து வருவதாகவும் இதுவே நஷ்டஈட்டுத் தாமதத்துக்குக் காரணமெனவும் தெரிவிக்கப்படுகின்றது.

## கண்காட்சி

மாவீரர் தினத்தை முன்னிட்டு உடுப்பிட்டி நாவலர் சனசமூக நிலையத்தில் இன்று பன்னவேலைக் கண்காட்சி ஒன்று நடைபெறவிருக்கிறது.

## விடுதி வசதி பற்றிய விவரங்கள் சேகரிப்பு

யாழ் மாவட்டத்திலுள்ள கோட்டங்களில் உள்ள பாடசாலைகளில் விடுதி வசதியுடைய பாடசாலைகளின் விவரம் சேகரிக்கப்படுகிறது.

அத்துடன் முன்னர் விடுதி வசதி இருந்தும் தற்போது இல்லாத பாடசாலைகள் விவரமும் தற்போது விடுதி வசதியுடன் இயங்கி வரும் பாடசாலைகள் விவரமும் தற்போது சேகரிக்கப்படுகின்றது. (15)

## ‘உணவை அனுப்பமுடியாவிட்டால்

## சவப்பெட்டிகளையாவது அனுப்புங்கள்’

‘பட்டினிச்சாவை எதிர்நோக்கியிருக்கும் யாழ். மக்களுக்கு தாராளமாக உணவுப் பொருள்களை அனுப்பிவையுங்கள் அல்லது போனால் அங்கு வாழும் பத்துலட்சம் மக்களுக்கும் பத்துலட்சம் சவப்பெட்டிகளையாவது அனுப்பிவையுங்கள்.

இவ்வாறு பாராளுமன்றத்தில் வரவு செலவுத் திட்ட விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய உறுப்பினர் ஒருவர் அரசைக் கேட்டுக் கொண்டார்.

1500 மாட்டு வண்டிகளை வடக்குக்கு அனுப்புமாறு பாராளுமன்றத்தில் எடுக்கப்பட்ட கோரிக்கைக்கு அங்கு பதிலளித்த ராஜாங்க அமைச்சர் ஒருவர் ‘வாய் பேசும் மனிதருக்கே வடக்கில் உணவில்லாதபோது வாய் பேசாப் பிராணிகளை அங்கு அனுப்பி அவற்றைக் குழியில் இடுவதா’? எனக் கேட்டார்.

## தமிழீழமீட்பு நிதி கடன் மீளளிப்பு

பருத்தித்துறை, கரவெட்டி வடமராட்சி கிழக்கு ஆகிய உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளைச் சேர்ந்த தமிழீழ மீட்புநிதி கடன் பத்திரதாரர்களில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு 27. 11. 91 புதன்கிழமை காலை 9 00 மணிக்கு பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரியில் கடன் மீளளிக்கப்படும் என தமிழீழ விடுதலைப் புலிகளின் நிதிப் பொறுப்பாளர் தமிழேந்தி அறிவித்துள்ளார்.

| | |
|---|---|
| நாட்டுக்கோழி முட்டை | பண்ணைக்கோழி முட்டை |

## இவற்றில் எது சிறந்தது?

நாட்டுக்கோழி முட்டைக்கும், பண்ணைக்கோழி முட்டைக்குமிடையே சக்தி கொள்ளவில் வித்தியாசம் இருப்பதாக பரவலாகக் கூறப்படுவதை இந்திய ஆராய்ச்சியாளர் ஒருவர் மறுத்துள்ளார்.

இரு ரகமுட்டைகளும் ஒரே சக்திக் கொள்ளளவையே கொண்டுள்ளன, சாதாரணமாக நாட்டுக்கோழி முட்டை 40 கிராம் நிறையுடையது இதனால் பண்ணைக் கோழி முட்டையே 60 கிராம் நிறையுடையது. பண்ணைக்கோழி முட்டையை உணவிற்குப் பயன்படுத்தினால் அதிகளவு புரதச் சக்தியையும், ஏனைய உணவுத் தேவைகளையும் பெறலாம் அது லாபகரமானதுமாகும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் கோழி முட்டையில் 230 மில்லி கிராம் கொழுப்பு மட்டுமேயுண்டு, ஆனால் ஒருவருக்கு நாளாந்தம் இரண்டு கிராம் கொழுப்புத் தேவைப்படுகிறது. இதனால் முட்டை அதிகளவு சாப்பிட்டால் கொழுப்புச் சத்து கூடி இருதயநோய் ஏற்படும் சந்தர்ப்பம் அதிகரிக்குமெனக் கூறப்படுவதிலும் எந்தவித உண்மையுமில்லை எனவும் அவர் கூறியுள்ளார்.

அடைகாத்து 21 நாளில் முட்டையிருந்து குஞ்சு பொரிக்கின்றது. வளர்ச்சிக்கான சகல வித்தமின்களையும் கனியுப்புக்கள் முட்டை தனக்கத்தே கொண்டிருக்கிறதுஎன்பதற்கு இது நல்ல உதாரணம் எனவும் அந்த இந்திய ஆராய்ச்சியாளர் தெரிவித்துள்ளார்.

★ பாராளுமன்றத்தில் விஜயசேகர எம், பி:-

# புலிகளுடன் தொடர்ந்து சண்டையிட இலங்கை அரசால் முடியாது!

## 'வடக்கு கிழக்கில் யுத்தம் முடிவுக்கு வரவேண்டும்'

எந்த நாடும் தொடர்ந்து யுத்தம் செய்து கொண்டிருக்க முடியாது புலிகளுடன் தொடர்ந்து சண்டையிட இலங்கையால் முடியவே முடியாது. அதை ஒரு முடிவுக்குக் கொண்டுவர வேண்டும். வடக்கு கிழக்கு யுத்தம் உடனடியாக நிறுத்தப்படல் வேண்டும்.

இவ்வாறு பாராளுமன்றத்தில் வரவு செலவுத் திட்ட விவாதத்தின் மீது பேசிய மாத்தளை மாவட்ட ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி உறுப்பினர் மகாநந்த விஜயசேகர கூறினார்.

வடக்கில் யுத்தம் நடைபெறுகிறது. யுத்தத்துக்கு நாம் பணம் செலவிடுகிறோம். யுத்தத்தில் இலங்கையர்களே கொல்லப்படுகின்றனர் எனவும் அங்கு தொடர்ந்து பேசிய விஜயசேகர தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் அன்றைய தினம் உரையாற்றிய வேறு பல உறுப்பினர்களும் வடக்கு கிழக்கில் யுத்தம் நிறுத்தப்பட வேண்டியதை அங்கு வலியுறுத்தினார்

## மாவீரர் நினைவாக அரியாலையில் 5 மைல் மரதன் ஓட்டப் போட்டி

மாவீரர் நினைவாக அரியாலை காந்தி சனசமூக நிலையம் ஐந்து மைல் மரதன் ஓட்டப் போட்டியை நேற்று நடாத்தியது. பதினைந்துக்கும் அதிகமான மரதன் ஓட்ட வீரர்கள் இப்போட்டியில் ஆர்வத்துடன் கலந்து கொண்டனர்.

இப்போட்டியில் முதலாவது இடத்தை ப. கேசவநாதனும், 2-வது இடத்தை ம. ஜனார்த்தனும், 3-வது இடத்தை ப. பரலோகநாதனும் பெற்றுக் கொண்டார்கள். (25)

## குச்சவெளியில் காணாமற் போனோர் பற்றி இதுவரை தகவலேதுமில்லை

குச்சவெளி உதவி அரசாங்க அதிபர் பகுதியில் கடந்த கால இராணுவ நடவடிக்கையினால் நூற்றுக் கணக்கானோர் காணாமற் போயுள்ளதாகவும் அவர்கள் நிலை பற்றி இன்னமும் உறவினர்களுக்குத் தெரியாமல் இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இப் பகுதியில் ஏற்பட்ட இராணுவ நடவடிக்கையால் வேறிடங்களுக்கு இடம் பெயர்ந்தோர் தவிர எஞ்சிய மக்கள் அகதி முகாம்களில் வாழ்ந்து வருகின்றனர்.

அப்பகுதி மக்கள் இடம் பெயர்ந்ததையடுத்து அவர்களது வீடு, வாசல்கள் சேதமாக்கப்பட்டுள்ளன. (08)

## ஊழியர்க்கு இருப்பிட வசதியில்லை ஆனால் நிதியோதிரும்பிச் செல்கிறது

திருகோணமலையில் உள்ள வடக்கு-கிழக்கு மாகாணசபையின் பல்வேறு அமைச்சு ஊழியர்களின் விடுதிக்கென ஒதுக்கப்பட்ட நிதி இம் முறையும் திருப்பி அனுப்பப்பட்டுள்ளது.

கடந்த வருடமும் இதற்கென நிதி ஒதுக்கப்பட்ட போதும் அப்பணத்தைப் பயன்படுத்தாததால் திரும்பிச் சென்றமையும் குறிப்பிடத்தக்கது.

இதே வேளை மாகாண அமைச்சுக்களின் ஊழியர்கள் இருப்பிட வசதி குறைந்த திருகோணமலையில் வாடகைக்கு வீடுகளைப் பெற்றுக் கொள்ள தெருத் தெருவாக அலைய நேரிடுகிறது. (08)

## இறுதிச்சடங்குகள் நடைபெற்றன

மண்டைதீவில் மரணமான முன்னாள் வவுனியா சைவப் பிரகாச வித்தியாலய அதிபர் இராமலிங்கம் கனகசுந்தரத்தின் இறுதிச் சடங்குகள் மண்டைதீவு 6 ஆம் வட்டாரத்தில் இடம்பெற்றதாக அறிவிக்கப்படுகின்றது

இவருடன் அங்கு தங்கியிருந்த இவரின் மனைவி இறுதிச்சடங்குகளை நடாத்தி வைத்தார்.

## இன்று

யாழ்ப்பாணம் கல்விக் கோட்டம் நடத்தும் மாவீரர் தின விழா இன்றுகாலை 9 30 மணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது



தமிழீழத்தின் தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரனின் 37 ஆவது பிறந்த தினத்தை(26.11.91) யொட்டி இச்சிறப்புக் கவிதைகள் பிரசுரமாகின்றன.

## "தலைவா! உன்னை வாழ்த்துகிறோம்!"

நீர்சுமந்து செல்லும் மேகம் - உன்றன்
நெஞ்சுறுதி கண்டு சொரிகிறது மழையை!
கார்வானில் நின் றெழும்பும் கதிரவனும்
களிப்புடனே ஒளிர்கிறதுன் கடமை கண்டு!
போர்மண்ணில் நீ புரியும் சாதனையை வியந்து
பொங்கியலை துள்ளியெழும் பெருங்கடலைப் பார்!
சீர்த்தமிழின் சிறப்போங்க நீ புரியுஞ் சேவை .......
செழித்துவர இவ்வாண்டில் வாழ்த்துகிறோம்.
உன்னை!

— கவிஞர் மு. வே. யோ. வாஞ்சிநாதன்

★ ★ ★

## உண்மை அர்த்தம் தந்தவன்!

இரும்புத்தசையும் எஃகுநரம்பும் ஈரநெஞ்சும் பெற்றவன்
ஈழ மண்ணில் மானயுத்தம் ஏற்றுவந்து நிற்பவன்
உறங்குகின்ற தமிழர்மண்ணில் உதயமாகி எழுந்தவன்
உலகமெங்கும் விடுதலைக்கு உண்மை அர்த்தம் தந்தவன்
இரும்புபோல எதிரிபடையைத் தூக்கி வீசி வென்றவன்
துன்பமுற்ற தமிழர்க்கென்றும் இன்பம்சேர்க்க வந்தவன்
மறம்படைத்த புலிப்படைக்கு மன்னனாக வாழ்பவன்
மானமொன்றே பிரபாகரன் மாண்புஎன்று கொண்டவன்

— முருகனடியான்

## பயிலுநர் ஆசிரியர்களுக்கு இலவச அறிக்கைப் புத்தகங்கள்

பயிலுநர் ஆசிரியர்கள் தமது அறிக்கைகளை எழுதுவதற்கு வசதியாக அறிக்கைப் புத்தகங்களை இலவசமாக வழங்க கல்வி உயர் கல்வி அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

இப் புத்தகங்களை அவர்களுக்கு வழங்கும் நடவடிக்கையை மேற்கொள்வதற்கு வசதியாகப் பயிலுநர் ஆசிரியர்களினது முகவரிகளைக் கோட்ட ரீதியாகத் தமக்கு அனுப்பி வைக்குமாறு கல்வி உயர்கல்வி அமைச்சின் செயலாளர் கேட்டுள்ளார்

இவ் அறிக்கைப் புத்தகத்தினை நிரப்புவது தொடர்பான அறிவுறுத்தல்களும் இப் புத்தகங்களுடன் அனுப்பி வைக்கப்படவுள்ளன. (15)

## பரீட்சை வினாத்தாள் குறித்து பாடசாலைகளுக்கு சுற்று நிருபம்

க. பொ. த. சாதாரண தரப் பரீட்சைக்குரிய வரலாறும் சமூகக்கல்வியும் பாடப் பரீட்சை வினாத்தாள் குறித்து பரீட்சைத் திணைக்களம் புதிய சுற்று நிருபமொன்றைப் பாடசாலைகளுக்கு தற்போது அனுப்பி வைத்துள்ளது.

க. பொ. த. (சா. தர) ப் பரீட்சை 1991 இலும் அதன் பின்னரும் நடைபெறும்போது வரலாறும் சமூகக் கல்வியும் என்னும் பாடத்தின் வினாத்தாள் 1 முன்னைய வினாத்தாள்களைப் போன்று 40 பலவினுள் ஒன்று தேர்வு வினாக்களைக் கொண்டதாக அமையுமென இச்சுற்று நிருபத்தில் அறிவிக்கப்பட்டுள்ளது.

11 ஆம் ஆண்டு வகுப்புகளைக் கொண்ட சகல பாடசாலை அதிபர்களுக்கும் பரீட்சை ஆணையாளர் இச் சுற்று நிருபத்தை அனுப்பி வைத்துள்ளார். (18)

## வெங்காயம் மிளகாய் செல்லாததால் தெற்கில் வாழ்க்கைச்செலவு அதிகம்!

தெற்கில் வாழ்க்கைச் செலவு அதிகரித்து வருகின்றமைக்கு யாழ் உற்பத்திப் பொருள்கள் அங்கு வராமையும் ஒரு காரணமென வர்த்தக வாணிப அமைச்சர் ஏ. ஆர். மன்சூர் பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்

'வடக்கில் போர் நீடிப்பதால் குறிப்பாக மிளகாய், வெங்காயம் போன்றவை ஏனைய பகுதிகளுக்கு அங்கிருந்து வருவதில்லை இதனால் [illegible] வேண்டியுள்ளது. இது வாழ்க்கைச் செலவை அதிகரிப்பதோடு அன்னியச் செலாவணி பிரச்சினையையும் ஏற்படுத்துகிறது' என அமைச்சர் அங்கு தெரிவித்தார்;

## டிப்ளோமா பரீட்சையில் 40 மாணவர்கள் சித்தி

இலங்கைத் திறந்த பல்கலைக் கழகத்தினால் நடாத்தப்பட்ட மேற்கல்வி டிப்ளோமா பரீட்சை முதலாம் வருட முடிவுகள் வெளி[illegible]

பிராந்திய நிலையத்தில் சுமார் 40 மாணவர்கள் சித்தி அடைந்து உள்ளனர். இப் பரீட்சை பல சிரமத்தின் [illegible]

## மன்னார்ச் செய்திகள்

### இறங்குதுறை இல்லை

மன்னார் தாழ்வுபாட் [illegible]

### மரக்கறி அதிகவிலை

மன்னார் நகர்ப் பகுதியில் [illegible]

## இறங்குதுறை இல்லை

மன்னார் தாழ்வுபாட்டில் இறங்குதுறை வசதியின்மையால் பயணிகள் பெரிதும் அவதியுறுகின்றனர். தாழ்வுப்பாட்டுக்கும் சுத்பிட்டிக்கும் இடையில் படகுச்சேவை நடைபெற்று வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

## மன்னாரில் படக்காட்சி

மன்னாரில் உள்ள தியேட்டர்கள் சேதமடைந்த நிலையிலேயே காணப்படுகின்றன. அண்மைக்காலமாக ஒரு மினித்தியேட்டரில் படக்காட்சி நடைபெற்று வருகிறது.

## மீன் பிடிக்கத் தடை

மன்னார்ப் பிரதேசக் கடற்பரப்பில் குறிப்பிட்ட நேரத்தில் மட்டுமே மீன்பிடிக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதனால் மீனவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளார்கள். மீன் விலையும் அதிகரித்துள்ளது.

பள்ளிமுனைப் பகுதியில் மீனவர் ஒருவர் சுட்டுக் கொலைப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (23)

## மரக்கறி அதிகவிலை

மன்னார் நகர்ப் பகுதியில் மரக்கறி அதிக விலையில் விற்கப்படுகிறது. இதனால் மரக்கறிப் பிரியர்கள் பெரும் கஷ்டப்படுகிறார்கள் கீரைகளை அரிதாகவே காணப்படுகிறது. சுத்பிட்டியில் இருந்து படகுகள் மூலமாக மரக்கறி கொண்டுவரப்படுவதால் அதிக விலையாக இருக்கிறது.

## தொடர்ந்தும் பஸ் நிலையத்தில்

மன்னார் நகர்ப் பகுதியில் பிரதான கடைப் பகுதி தொடர்ந்தும் வெறிச்சோடிய நிலையில் காணப்படுகிறது. பஸ்நிலையத்தில் கடைகளும், மீன்சந்தையும் காணப்படுவதால் சனக்கூட்டம் காணப்படுகிறது.

## முத்திரை தட்டுப்பாடு

மன்னார் தபாலகத்தில் அடிக்கடி முத்திரைத் தட்டுப்பாடு ஏற்படுகிறது. ஒரு ரூபா ரூபா முத்திரை கூட இல்லாமல் போய்விடுகிறது. இதனால் சாதாரண தபால்களுக்கும் மக்கள் அதிக பெறுமதியான முத்திரையை ஒட்ட வேண்டி ஏற்படுகிறது. (23)

11 ஆம் ஆண்டு வகுப்புக்களைக் கொண்ட சகல பாடசாலை அதிபர்களுக்கும் பரீட்சை ஆணையாளர் இச்சுற்று நிருபத்தை அனுப்பி வைத்துள்ளார். (18)

'வடக்கில் போர் நீடிப்பதால் குறிப்பாக மிளகாய், வெங்காயம் போன்றவை ஏனைய பகுதிகளுக்கு அங்கிருந்து வருவதில்லை இதனால் அவற்றை இறக்குமதி செய்ய

## 21:3 வீதமாக அதிகரிப்பு

கடந்த ஆண்டு இலங்கையின் பணவீக்கம் 21:3 வீதத்தால் அதிகரித்துள்ளதாக மத்திய வங்கி அறிக்கையை மேற்கோள்காட்டி 'ஏசியா வீக்' பத்திரிகை தெரிவித்துள்ளது

## 1992 பட்ஜட் பற்றி இவர்கள் சொன்னவை...

1992 ஆம் ஆண்டுக்கான பட்ஜட் பற்றி பாராளுமன்றத்தில் சில உறுப்பினர்கள் சொன்ன கருத்துக்கள் இவை:-

இந்த பட்ஜட் திடீர் இடியப்பம், திடீர் அப்பம் என்பவற்றைப் போன்றது.

எஸ். டி. ஆர் ஜெயரத்னா

★ ★ ★

இலங்கையை இன்னொரு கொரியாவாக முன்னெடுத்துச் செல்லும் வகையில் இந்த பட்ஜட் உள்ளது.

- ராஜாங்க அமைச்சர் காதர்

★ ★ ★

சிங்கமோ சிங்கமோ தங்கமான பட்ஜட் இது.

எம். பி. என். ஐயூப்

★ ★ ★

வறுமையில் வாடுபவர்களுக்கு ஒரு தொன்வார்த்தை ஜாலங்கள், கம்பனிக்காரர்களுக்கு பவுண் காசுகள், இதுதான் இந்த பட்ஜட்டின் தாத்பரியம்.

வாசுதேவ நாணயக்கார

★ ★ ★

இந்த பட்ஜட்டினால் சாதாரண மக்களுக்கு மீட்பு இல்லை அடுத்த பட்ஜட்டை சமர்ப்பிக்கப் போகிறவர்கள் நாங்களே.

- எச். ஜி. சிறிசேனா (சுதந்திரக்கட்சி)

இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தினால் நடாத்தப்பட்ட மேற்கல்வி டிப்ளோமா பரீட்சை முதலாம் வருட முடிவுகள் வெளியாகியுள்ளன

இப் பரீட்சையில் யாழ் பிராந்திய நிலையத்தில் சுமார் 40 மாணவர்கள் சித்தி அடைந்து உள்ளனர். இப் பரீட்சை பல சிரமத்தின் மத்தியில் இங்கு நடைபெற்றது குறிப்பிடத்தக்கது. 44

## சாதாரணதரப் பரீட்சைக்கு கொழும்பில் விசேட மண்டபம்

வடக்கு, கிழக்குப் பகுதிகளிலிருந்து இடம் பெயர்ந்துள்ள மாணவர்களுக்கென கல்விப் பொதுத் தராதரப் பத்திர சாதாரணப் பரீட்சைக்கு கொழும்பில் விசேட பரீட்சை மண்டபமொன்று அமைக்கப்படவுள்ளதாக பரீட்சைத் திணைக்கள ஆணையாளர் அறிவித்துள்ளார்.

எதிர்வரும் ஒன்பதாம் திகதி சாதாரணதரப் பரீட்சை ஆரம்பமாகவுள்ளமை தெரிந்ததே.

## பனையை உருவாக்குவதற்கு நாற்றுமுறை சிறந்தது

பனையை உருவாக்குவதற்கு பொலித்தீன் பைகளில் பனம் கிழங்கை நட்டு நாற்றுப் பெறும் முறை சிறந்தது என யாழ் பல்கலைக்கழகப் பேராசிரியர் கே. தேவேந்திரராஜா கூறியுள்ளார்:

இலங்கை விஞ்ஞான முன்னேற்றச் சங்கத்தின் ஏற்பாட்டில் கொழும்பில் நடாத்தப்பட்ட பத்திரிகையாளர் மகாநாட்டில் அவர் இதனைத் தெரிவித்தார்.

இலங்கையில் ஒருகோடியே பத்து இலட்சம் பனைகள் இருக்கின்றன. யாழ்ப்பாணம் புத்தளம், மன்னார்ப் பகுதிகளிலேயே அதிக பனைமரங்கள் உள்ளன.

முழுமையாக இவற்றைப் பயன்படுத்தினால் 15 ஆயிரம் தொன் பனங்களி எடுக்கலாம். பனங்களியில் பனாட்டு பனம்பானம், சாராயம், பெக்கடின், கரடீன் போன்றவற்றைத் தயாரிக்கலாம் எனவும் அவர் அங்கு சொன்னார்.

● ஒரு தோளிலே துவழும் மழலைகள், மறு தோளிலே எழுச்சிச் சுலோகங்கள்

# ஈவிரக்கமில்லாதோருக்கு பசியின் கொடுமைபுரியுமோ?

# தீவக அன்னையர் நேற்று உணர்ச்சி ஊர்வலம்

ஸ்ரீலங்கா அரசின் திட்டமிட்ட ரீதியிலான வஞ்சகத் தன்மையினால் தமிழீழத்தில் விடுதலை உணர்வுடன் உருப்பெறும் மழலைகளும் கூட அருந்தப்பாலுணவு இன்றி இன்னலுறும் சொல்லொணா தன்மைதனை வெளிப்படுத்திடும் வகையில் தமிழீழத் திருமண்ணில், வீரமைந்தரைப் பெற்றிட்ட அன்னையர் நேற்று உணர்ச்சி பூர்வ ஊர்வலம் ஒன்றினை செயலகம் நோக்கி நடத்தினர்.

செயலற்றுப் போன தம் வாழ்க்கையின் துன்பநிலைதனை அவர்கள் அங்கு எடுத்துரைத்தனர்.

பாலமணம்மாறா சிசுக்கள் அந்த அன்னையர் தோளில் சோர்வுடன் உறங்குகின்ற காட்சி காணமுடிந்தது. கந்தல் ஆடையுடனும் சில அன்னையர் விழிநீர் உகுத்த வந்த காட்சியும் காண முடிந்தது.

அவர்கள் தம் உதிரத்தின் உதிரமான மழலைகளை ஒரு தோளில் ஏந்தியும் மறு தோளில் சுலோக அட்டைகளையும் ஏந்திவந்தனர்.

இடம்பெயர்ந்த தீவகமக்கள் மாதர் முன்னணியினரே இவ்வூர்வலத்தை நடத்தினர்.

தம் கோரிக்கைகள் அடங்கிய மகஜரை அவர்கள் மேலதிக அரசாங்க அதிபரிடம் கையளித்தனர்.

இம்மகஜர்களின் பிரதிகளை ஸ்ரீலங்கா செஞ்சிலுவைச் சங்கக்கிளையிடமும், ஐ. சி. ஆர். சியிடமும் கையளித்தனர்.

16, 25

## அமைச்சரின் பெயரில் வேலைவாய்ப்பு மோசடி

ஜப்பானில் வேலைபெற்றுத் தருவதாககூறி பலரை ஏமாற்றி சுமார் முப்பதுலட்சம் ரூபாவை மோசடி செய்த மூவர் கொழும்பில் கைதாகியுள்ளனர்.

இவர்கள் அமைச்சர் ஒருவரின் பெயரையும் பயன்படுத்தி இம்மோசடியில் ஈடுபட்டதாக கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

## மன்னார்ப்பகுதி அகதிகள் உடன்திரும்பதேவையில்லை

மன்னாரில் இருந்து இடம்பெயர்ந்த அகதிகள் உடனடியாக அங்கு திரும்பவேண்டும் என அரசு வற்புறுத்தாது என ஜனாதிபதி பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

மன்னார் அகதிகள் நிலைமை குறித்து ஜனாதிபதியைச்சிலர் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடாத்தினர்.

இவர்களுக்கு தொடர்ந்தும் உலர் உணவு வழங்கப்படும் எனவும் ஜனாதிபதி கூறினார்.

இதேவேளை எருக்கலம்பிட்டியில் நிலைகொண்டுள்ள இராணுவத்தை வெளியேற விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

## அதிகாரிகள் கைது

ராகமையைச்சேர்ந்த சரணபால என்ற இளைஞனை கடத்திக் கொலை செய்த குற்றத்திற்காக மூன்று இராணுவ அதிகாரிகளுக்கும், ஒரு பொலிஸ் உத்தியோகத்தருக்கும் எதிராக நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இவர்கள் மீதான விசாரணை டிசம்பர் 4ம் திகதி நடைபெறவுள்ளது என்றும் சட்டமா அதிபரின் ஆலோசனை இவ்விசாரணையின் போது பெறப்பட்டது என்றும் பிரஸ்தாப இளைஞரின் சடலம் வயலொன்றில காணப்பட்டது என்றும் மேலும் தெரிவிக்கப்படுகின்றது.

## தலைவர் பிரபாகரன்தலைமையில் புதுயுகம் தமிழர் வாழ்வொன்றே முழுஎண்ணம்!

''தமிழீழத்தில் முன்னர் அரசியல் வாழ்வு நடத்திய பெரும் தலைவர்கள்'' என்று சொல்லப்பட்டவர்கள் மணவிடொன்றிற்குச் சென்றால் தமே முக்கியமாகக் கருதப்படவேண்டியவர் என்ற நோக்கில் பணமகனாக முன்நிற்க முனைவர். இழவு வீட்டுக்குச் சென்றால் சடலத்தை சகலரும் உற்று நோக்கி வணக்கம் செலுத்துவது போல தம்மை 'ஹீரோவாக்கி' முனைந்தனர். ஆனால் இன்றோ புத்தெழுச்சி பெற்றிட்ட தமிழர் மத்தியில் அத்தகைய வியாபாரத் தந்திரம் பலிக்காது. காரணம், தன் சுகபோகம் மறந்த தலைவன் வேலுப்பிள்ளை பிரபாகரன் தலைமையில் புதுயுகம் பிறந்துவிட்டது''.

இவ்வாறு சுன்னாகம் மயிலணி மகாவித்தியாலயை சார்ந்த சூழல் வாழ் மக்களிடையே நடைபெற்ற மாவீரர் தொடர்பான கருத்துரையாடல் நிகழ்ச்சியில் பேசுகையில் விஞ்ஞான ஆசிரியர் திரு. எஸ், செல்வகுமார் கூறினார்.

## குற்றவாளியான இன்ஸ்பெக்டர் நீதிமன்றில் சுட்டுக்கொலை

கடந்த வருடம் பெப்ரவரி மாதம் விசாரணையின் போது சில ஜே. வி. பி, சந்தேக நபர்களை கொலை செய்ததாக குற்றஞ்சாட்டப்பட்ட சப்இன்ஸ்பெக்டர் ஒருவர் நேற்று சுட்டுக்கொல்லப்பட்டார்.

விசாரணையின் பொருட்டு இவர் நேற்று நீர்கொழும்பு நீதிமன்றத்திற்கு கொண்டு வரப்பட்டபோதே இனந்தெரியாத நபர் ஒருவர் அவரை சுட்டுக் கொன்றதாக தெரிவிக்கப்படுகிறது.

பொலிஸாரின் உறவினர்கள்

## இருதினங்களுக்கு தங்க செஞ்சிலுவை ஏற்பாடு

விடுதலைப் புலிகளால் சிறை பிடிக்கப்பட்டுள்ள நாற்பத்துஇரண்டு ஸ்ரீலங்காபொலிசாரையும் நேரில் பார்வையிட தென்னிலங்கையிலிருந்து வரவுள்ள உறவினர்கள் இரண்டு மூன்று தினங்களுக்கு இங்கு தங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இத்தகவலை வெளியிட்ட ஸ்ரீலங்காவிற்கான சர்வதேச செஞ்சிலுவைச்சங்கத் தலைவர் வெற்றாச், இதன் மூலம் அவர்கள் தமது உறவினர்களுடன் நீண்ட பொழுதை கழிக்க முடியும் என்றார்.

## கச்சதீவு ஸ்ரீலங்காவிற்கு உரியது இந்திய அமைச்சர் அறிவிப்பு

''கச்சதீவு ஸ்ரீலங்கா அரசுக்கே சொந்தமானது. 1974இல் இரு அரசுகளுக்கும் இடையில் செய்யப்பட்ட ஒப்பந்தத்தை மறுபரிசிலனை செய்யும் திட்டம் இந்தியாவிற்கு இல்லை.

இவ்வாறு இந்திய வெளியுறவு இணையமைச்சர் எட்வாடோ பெலேரோ நேற்று இராஜ்ய சபாவில் தெரிவித்தார்.

கச்சதீவு ஸ்ரீலங்காவின்கடல் எல்லையிலேயே உள்ளது. எனினும் தவறுதலாக இந்திய மீனவர் கச்சதீவு அருகில் சென்றால் ஸ்ரீலங்கா கடற்படையினர் சட்டரீதியாகவும், மனிதாபிமான ரீதியாகவும் அவர்களை தாக்கக் கூடாது என இந்தியா ஸ்ரீலங்கா அரசிடம் வலியுறுத்தியுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார்.

கச்சதீவை இந்தியாவிற்கு மீள பெற்றுத்தருமாறு தமிழக முதல்வர் ஜெயலலிதா மத்திய அரசை வலியுறுத்தி வருவது தெரிந்ததே.

## திருமலையில் பனம் பானம்

பனை அபிவிருத்திச் சபையினால் தயாரிக்கப்படும் பனம்பானம் திருகோணமலையில் அறிமுகப் படுத்தப்பட்டுள்ளது

சிங்களப் பேராசிரியர் பொலிஸ் விசாரணையில்

## பல்கலைக்கழக அமைதிக்குலைவு ஜே. வி. பி. பின்னணியில்?

கொழும்பு பல்கலைக்கழகங்களில் தற்போது நிலவும் குழப்பநிலைகளுக்கும், அமைதியின்மைக்கும் ஜே. வி. பி ஆதரவாளர்களே பின்னணியில் இருந்து இயங்குவதாக புலனாய்வு அறிக்கைகள் சுட்டிக்காட்டுகின்றன.

அவர்களுடைய முழு நோக்கமும் பல்கலைக்கழகங்களை இயங்கா செய்வதே என அவ்வறிக்கை மேலும் குறிப்பிடுகிறது.

20 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட பல்கலைக் கல்லூரிகளாகும். பல்கலைக்கழகங்களுக்கு அனுமதி பெறாத மாணவர்கள் உயர்கல்வி பெறும் வாய்ப்பினை அளிப்பதற்கு இக்கல்லூரிகள் ஆரம்பிக்கப்பட்டன என்பது குறிப்

இதுவிடயமாக பொலிசார்

35 ...

கோட்டை ரயில் நிலையத்தில்

## காத்தான்குடி வாசியை கடத்த ராணுவம் முயற்சி

கொழும்பு கோட்டை ரயில் நிலையத்தில் மட்டக்களப்பிற்குச் செல்லும் ரயில் பயணம் செய்யவிருந்த காத்தான்குடி ... ஒருவரால் கைது செய்யப்பட்டனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது

கொழும்பு டச்சேவைக்கழகங்களில் தற்போது நிரூப் ன் முறைகளுக்கும், ஆபைநீயின் லைபட்ட தே. வி. பி ஆதர வாளர்களே பின்னணியில் இருந்து இயங்குவதாக புல

35 ...

மாவீரர்களின் பெற்றோரால் 12.03இல் சகல மாவீரர் துயிலுமில்லங்களிலும் மாவீரர் சுடர்கள் உணர்வு பூர்வமாக ஏற்றப்படும், அதுபோல சகல பாடசாலைகள், உயர்கல்வி நிலையங்கள், தனியார் கல்வி நிலையங்கள், ஆலயங்கள், தேவாலயங்கள், சன சமூக நிலையங்கள் மாதர் சங்கங்கள், பொதுஸ்தாபனங்கள் வர்த்தக நிலையங்கள் என்பவற்றிலும் அந்த நிறுவனங்களைச் சேர்ந்த அங்கத்தவர்களால் மாவீரர் சுடர்கள் ஏற்றப்படும்.

தமிழீழ மக்கள் தங்கள் வீடுகளில் சிட்டிகளிலும், டந்தங்களிலும் வேறுமுறைகளிலும் மாவீரர் சுடர்களை பக்தியுடனும் உணர்வு பூர்வமாகவும் ஏற்றிவைப்பார்கள். இந்தச் சுடர் ஒளியினது பிரகாசத்திலே, தமிழீழ மண்ணில் இரண்டு ஒரு சூரியன் உதித்துவிட்டதோ என்று ஐயப்படும் அளவுக்கு இந்த ஒளிப்பிரகாசம் இடம்பெறும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

காய்வு அறிக்கைகள் சுட்டிக் காட்டுகின்றன,

அவர்களுடைய முழு நோக்கமும் பல்கலைக்கழகங்களை இயங்காமல் செய்வதேயென அவ்வறிக்கை மேலும் குறிப்பிடுகிறது.

இதுவிடயமாக பொலிசார் பேராசிரியர் டாக்டர் நலின் சில்வாவை விசாரணைக்கு உட்படுத்தியுள்ளதாகவும் தெரிகிறது.

இந்தப் பிரச்சினை உருவானதற்குக் காரணம் சென்ற

## உறுதி மிக்க...

கைதாகினும் உறுதிகுலையப் போவதில்லை

சர்வதேச அரங்கில் குறிப்பாக சோவியத் யூனியனில் கூட சுதந்திர வேட்கை தலைதூக்கியுள்ளது தெளிவாகின்றது.

இன ஒடுக்கலுக்கு எதிரான எமது தார்மீகப் போராட்டம் வென்றே தீரும் என்பதில் ஐயமில்லை" என்றார்.

இக் கூட்டத்தில் விடுதலைப்புலிகள் தளபதி திரு. சூசை, திரு கலையரசன், விடுதலைப் புலிகள் மகளிர் முன்னணியைச் சேர்ந்த சந்திரிகா, இளவேலாஜினி முதலான பலரும் மாவீரர் எழுச்சிவாரமகத்துவம்பற்றி விரிவாக எடுத்துரைத்தனர்.

20 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட பட்டகலைக் கல்லூரிகளாகும். பல்கலைக்கழகங்களுக்கு அனுமதி பெறாத மாணவர்களை உயர்கல்வி பெறும் வாய்ப்பினை அளிப்பதற்கு இக்கல்லூரிகள் ஆரம்பிக்கப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது.

உயர்கல்வி அமைச்சர் ஹமீட் பல்கலைக்கழக துணை வேந்தர்கள் எல்லோரிடமும் இவ்விடயம் பற்றிக் கலந்தாலோசித்தார்.

அநேகமான மாணவர்கள் நிர்வாகத்துக்கு ஒத்துழைப்பு நல்க முன்வந்துள்ளதாக துணைவேந்தர் பலரும் அக்கலந்துரையாடலில் எடுத்துரைத்தனர்.

## ஸ்ரீலங்கா...

டாட்டத்தின் போது வன்முறை தலைதூக்கியதன் பேரில் பொலிஸார் அழைக்கப்பட்டனர்.

பல்கலைக்கழக விரிவுரைகள் தடங்கல் இன்றி நடைபெறுவதற்கும, பொலிஸாரின் கண்காணிப்பு இருக்கும் எனத் தெரிவிக்கப்பட்டது.

## 6 அநுராதபுர...

படுவதாக சட்டமா அதிபர் தெரிவித்தார்.

எனினும் இவர்களுடன் கைதான 8 ராணுவ அதிகாரிகள் மற்றும் ஏனையவர்களுக்கு எதிரான விசாரணை தொடர்கிறது.

# கடத்த ராணுவம் முயற்சி

கொழும்பு கோட்டை ரயில் நிலையத்தில் மட்டக்களப்பிற்குச் செல்லும் ரயில் பயணம் செய்யவிருந்த காத்தான்குடியைச் சேர்ந்த பயணி ஒருவரை இரு இராணுவத்தினர் கடத்த முயன்ற போது பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இக் கடத்தலுக்கான காரணம் புரியவில்லை எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

## இந்தியா மீது பழியா?

# வியப்பற்றாராம் பிரதமர் ராவ் சொல்கிறார் தொண்டமான்

"சார்க் மகாநாடு தடைப்பட்டதற்கு இந்தியா மீது ஸ்ரீலங்கா அரசு பழி சுமத்தியது இந்தியப் பிரதமருக்கு ஆச்சரியமாக இருந்தது. சார்க் மகாநாட்டை தாமதிக்கா து கூட்டும்படி மாலைதீவு அரசை இந்தியா கேட்டுள்ளது"

இவ்வாறு அமைச்சர் திரு. எஸ். தொண்டமான் கொழும்பு நாளிதழ் ஒன்றுக்கு அளித்த பேட்டி ஒன்றில் கூறியுள்ளார்.

# தமிழகத்தில் கைது

ராஜீவ் காந்தி கொலை தொடர்பாக மற்றுமோர் வழக்கறிஞர் தமிழக பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

டி. வீரசேகர் என்ற வழக்கறிஞரே தற்போது கைது செய்யப்பட்டவராவர். முன்னதாக மருதநாயகம் என்ற வழக்கறிஞரும் திருச்சியில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டமை தெரிந்ததே.

## மூவாயிரத்...

மேற்பட்ட மாவீரர்களின் பெற்றோர்கள் மூவாயிரத்து ஐந்நூறு சுடர் விளக்குகளை தெரிவு செய்யப்பட்ட இடங்களில் மாவீரர்களுக்கு ஏற்றுவார்கள். 07

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை

## அறிவித்தல்

தற்காலிக ஆங்கில போதனாசிரியர் விவசாய பீடம் கிளிநொச்சி

மேற்படி பதவிக்காக 1991.12.03 (செவ்வாய்க் கிழமை) நடைபெற இருந்த நேர்முகப் பரீட்சை அன்றையதினம் நடைபெற மாட்டாது என்பதை அறியத்தருகிறேன்.

நேர்முகப் பரீட்சை நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

பதிவாளர்.

யாழ் பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்,
1991 1125.

11060

இப்பத்திரிகை ஈழநாடு பப்ளிஷேர்ஸ் (பிறைவேற்) லிமிற்றெட் நிறுவனத்தாரால் யாழ் கஸ்தூரியார் வீதி 'லக்ஷ்மி பில்டிங்'இல் உள்ள அச்சகத்தில் 26.11.1991 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது